**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.2**
**MCOP.NO.248/2020**

| | | |
|---|---|---|
| **NAME** | : | ஸ்ரீநாத் |
| **FATHER NAME** | : | |
| **VILLAGE** | : | |
| **TALUK** | : | |
| **CALLING** | : | |
| **RELIGION** | : | |
| **AGE** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of 02.09.2022.**

1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல சம்மன் எனக்கு வரவில்லை. பிரமாண வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு நன்றாக தெரியும். இது நான் சொல்லித்தான் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. 02.02.2020 அன்று விபத்து நடந்தது. நான் விபத்தை பக்கத்தில் இருந்து பார்த்தேன். 4கி.மீ தூரத்தில் இருந்து பார்க்கவில்லை, பக்கத்தில் இருந்து பார்த்தேன். இறந்த நபர் எனக்கு உறவினர் கிடையாது. ஊர்க்காரர்கள் சொல்லி எனக்கு இறந்த விவரம் தெரியும். இறந்தவருக்கு 60 வயதுக்கு மேல் இருக்கும். விபத்து சாயங்காலம் நடந்தது. நான் என்னுடைய நண்பருடைய திருமண வரவேற்பிற்கு சென்றிருந்தேன். நான் அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவில்லை. நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. போலீஸ் என்னை விசாரித்தார்கள். குற்றவியல் நீதிமன்றத்தில் என்னை அழைத்திருந்தார்கள். நான் போகவில்லை. நான் பக்கத்திலிருந்து இருந்து விபத்தை பார்த்திருந்தால் அவரை மருத்துவமனையில் சேர்த்திருப்பேன் என்றாலும் எனவே விபத்தை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் மனுதாரருக்கு பவ்வியப்பட்டு பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சர்க்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று சொல்லி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.